செ.வெ.எண்: 50-2020 நாள்: 22.02.2020

**விழுப்புரம் மாதிரி அரசினர் மகளிர் மேல்நிலைப்பள்ளியில் பள்ளிக்கல்வித்துறை சார்பில் மாணவ, மாணவியர்களுக்கு 2019-2020ஆம் ஆண்டிற்கான விலையில்லா மிதிவண்டியினை மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலைகள் மற்றும் கனிமவளத்துறை அமைச்சர் திரு.சி.வி.சண்முகம் அவர்கள் வழங்கினார்.**

இன்று (22.02.2020) முன்னதாக நகராட்சி கல்வி நிதி திட்டத்தின் கீழ் பூந்தோட்டம் நகராட்சி உயர்நிலைப்பள்ளி மற்றும் பி.என்.தோப்பு தொடக்கப் பள்ளி ஆகிய இரண்டு பள்ளிகளுக்கு ரூ.19.50 இலட்சம் மதிப்பிலான மின்திறை நவீன வகுப்பறையினை மாணவ, மாணவியர்களின் பயன்பாட்டிற்காக மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலைகள் மற்றும் கனிமவளத்துறை அமைச்சர் திரு.சி.வி.சண்முகம் அவர்கள் திறந்து வைத்து.

இதனை தொடர்ந்து விழுப்புரம் மாதிரி அரசினர் மகளிர் மேல்நிலைப்பள்ளியில் பள்ளிக்கல்வித்துறை சார்பில் மாணவ, மாணவியர்களுக்கு 2019-2020ஆம் ஆண்டிற்கான விலையில்லா மிதிவண்டியினை மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலைகள் மற்றும் கனிமவளத்துறை அமைச்சர் திரு.சி.வி.சண்முகம் அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் விழுப்புரம் கல்வி மாவட்டத்தைச் சார்ந்த 14 பள்ளிகளில் பயிலும் 2769 மாணவ, மாணவியர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகளை மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலைகள் மற்றும் கனிமவளத்துறை அமைச்சர் திரு.சி.வி.சண்முகம் அவர்கள் வழங்கினார்.

இதனை தொடர்ந்து மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டு திட்டத்தின் கீழ் மாற்றுத்திறனாளிகளுக்கு நவீன செயற்கைக்கால்களையும் மற்றும் திருமண நிதியுதவி திட்டத்தின் கீழ் மாற்றுத்திறனாளிகளுக்கு நிதியுதவிகளையும் என மொத்தம் 54 பயனாளிகளுக்கு ரூ.18.66 இலட்ம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளையும் மேலும், திருமண நிதியுதவி திட்டத்தின் கீழ் 38 பயனாளிகளுக்கு தலா 08 கிராம் தங்கக் காசுகளையும் மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலைகள் மற்றும் கனிமவளத்துறை அமைச்சர் திரு.சி.வி.சண்முகம் அவர்கள் வழங்கினார்.

தொடர்ந்து வருவாய் ஈட்ட முடியாத தாய், தந்தையை இழந்த விழுப்புரம் கல்வி மாவட்டம், திண்டிவனம் கல்வி மாவட்டம் மற்றும் செஞ்சி கல்வி மாவட்டத்தைச் சார்ந்த 33 மாணவர்களுக்கு ரூ.27.75 இலட்சம் மதிப்பிலான நிதியுதவியினை மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலைகள் மற்றும் கனிமவளத்துறை அமைச்சர் திரு.சி.வி.சண்முகம் அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஆ.அண்ணாதுரை.இ.ஆ.ப., வானூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.எம்.சக்ரபாணி, விக்கிரவாண்டி சட்டமன்ற உறுப்பினர் திரு.எம்.ஆர்.முத்தமிழ்செல்வன், கூடுதல் ஆட்சியர் (வருவாய்) திருமதி.ஸ்ரேயா.பி.சிங்.இ.ஆ.ப., மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் திரு.முனுசாமி, மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் திரு.சி.குமார். நகராட்சி ஆணையர் திரு.தட்சிணாமூர்த்தி, மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், விழுப்புரம்.